**<u>கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்</u>**

முன்னிலை : திருமதி.G.ரேஷ்மா, பி.எஸ்.சி.. பி.எல்.,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம், பெரம்பலூர்.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05 ஆம் தேதி வியாழக்கிழமை

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.221/2022</u>**

<u>(CNR No.TNPB02-005647-2022)</u>

அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
பாடாலூர் காவல் நிலையம்,
குற்ற எண்.584/2021. ... குற்ற முறையீட்டாளர்

/எதிர்/

1. மருகண்டன், வயது 20/2021
த/பெ.செல்வராஜ்,
2. பெரியசாமி, வயது 20/2021
த/பெ.வடிவேல்
3. புகழேந்தி, வயது 22/2021
த/பெ.பூபதி,
4. சித்து, வயது 24/2021
த/பெ.கந்தசாமி,
5. சந்திரசேகர், வயது 23/2021
த/பெ.பெரியசாமி
6. கார்த்திக், வயது 20/2021
த/பெ.சுரேஷ்
7. ராகுல்காந்தி, வயது 27/2023
த/பெ.ராஜேந்திரன்,
8. சுதாகர், வயது 24/2021
த/பெ.ஜோதிவேல்
9. பூவரசன், வயது 26/2021
த/பெ.பெரியசாமி,
10. கார்த்திக், வயது 21/2023
த/பெ.ராஜேந்திரன்,

**<u>எதிரிகளின் முகவரி</u>**
தெரணி கிராமம் ,
ஆலத்தூர் தாலுகா,
பெரம்பலூர் மாவட்டம்.

... எதிரிகள்

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 07.04.2021ம் தேதியிட்ட R.O.C.No.814/2020/RG /F1 ன் படி இவ்வழக்கில் கீழ்க்கண்ட விவரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.)

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:38:36 +0530

<table>
<tr><th>வ. எண்</th><th>பொருள்</th><th colspan="2">விவரம்</th></tr>
<tr><td rowspan="4">1.</td><td rowspan="4">குற்றம்சாட்டப்பட்டவர் / எதிரிகள் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்ட காலம்</td><td colspan="2">(எதிரிகள் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்படவில்லை)</td></tr>
<tr><td>காவலில் வைக்கப்பட்ட தேதி</td><td>விடுவிக்கப்பட்ட விவரம் & தேதி</td></tr>
<tr><td>A1 , A4, A5, A6, A8, A9 –05.11.2021<br><br>A2 , A3, A7–<br><br>A10–</td><td>10.11.2021<br><br>14.12.2021(AB)<br><br>15.12.2021(AB)</td></tr>
<tr><td colspan="2"></td></tr>
<tr><td>2.</td><td>நீதிமன்றத்தில் புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி</td><td colspan="2">21.07.2022</td></tr>
<tr><td>3.</td><td>அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கினை சமர்ப்பித்த தேதி</td><td colspan="2">இல்லை</td></tr>
<tr><td>4.</td><td>குவிமுச பிரிவு 240 இன் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரிடம் / எதிரிகளிடம் விசாரிக்கப்பட்ட தேதி</td><td colspan="2">240 Crpc on<br>நாள் :18.10.2023</td></tr>
<tr><td>5.</td><td>இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து மனுக்களின் (குவிமுச பிரிவு 317–ன் கீழான மனு தவிர) மீதான உத்தரவு விபரம் (இந்நீதிமன்றத்தில் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டில் மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய உத்தரவு உட்பட)</td><td colspan="2">1.M.P.No. 5 of 2024 Dt : 14.03.2024<br>M.P.No. 01 of 2024 Dt : 13.03.2024<br>M.P.No. 08 of 2024 Dt : 06.08.2024<br>Surrender petition–Accepted.<br><br>2. Crl.M.P.No.3631 of 2021 Dt :10.11.2021<br>Crl.M.P.No. 3632 of 2021 Dt : 10.11.2021<br>Crl.M.P.No. 3633 of 2021 Dt : 10.11.2021 – U/s.437 Cr.P.C.–Allowed<br><br>3. M.P.No. 02 of 2024 Dt : 13.03.2024 – Advance hearing petition–Allowed<br><br>4. M.P.No. 03 of 2024 Dt : 13.03.2024 – U/s.70(2) Cr.P.C.–Allowed<br><br>5. M.P.No. 18 of 2026 Dt : 25.02.2026 – U/s.348 BNSS.–Allowed</td></tr>
</table>



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:38:40 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்த தேதி | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1<br>அ.சா.2<br>அ.சா.3<br>அ.சா.4<br>அ.சா.5<br>அ.சா.6 | 17.06.2025<br>01.07.2025<br>01.07.2025<br>01.07.2025<br>25.09.2025<br>25.02.2026 | 17.06.2025<br>இல்லை<br>இல்லை<br>இல்லை<br>25.09.2025<br>25.02.2026 |
| 7 | எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(1)(b)–இன் கீழ் வினா வினவப்பட்ட தேதி | 05.03.2026 | | |
| 8. | எதிரிகள் தலைமறைவு குறித்த விபரம் மற்றும் எதிரிகள் ஆஜர்படுத்தப்பட்ட/ தோன்றிய விபரம் | தலைமறைவு ஏதும் இல்லை. | | |
| 9. | இவ்வழக்கில் மேலமை நீதிமன்றம் பிறப்பித்த தடை உத்தரவு ஏதேனும் இருப்பின் அது குறித்த விவரம் | தடை உத்தரவு ஏதும் இல்லை | | |

இவ்வழக்கானது 26.07.2022 ஆம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இதுநாள்வரை விசாரணையில் இருந்து வந்து 05.03.2026 ஆம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது அரசுத் தரப்பில் கற்றறிந்த கூடுதல் குற்றவியல் பொது வழக்கறிஞர் திரு. சண்முகராஜ் அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. I. காமராசு அவர்கள் முன்னிலையாகியும் எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

<u>**தீர்ப்புரை**</u>

<u>**அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:**</u>

1. இவ்வழக்கின் வாதி கருப்புசாமி 04.11.2021 ஆம் தேதி தீபாவளி என்பதால் மாலை 05.00 மணிக்கு தனது வீட்டிலிருந்து மகள் ஜீவிதா, மனைவியின் தங்கை காந்திமதி, காயத்ரி, கௌதமி, ராஜசுதா, நந்தினி ஆகியோர்களுடன் தங்கள் ஊரில் உள்ள ஆஞ்சநேயர் மலைக்கு சென்று சாமி கும்பிட்டுவிட்டு மீண்டும் மாலை 06.15 மணிக்கு மலையிலிருந்து திரும்பி கீழே இறங்கி மலையடிவாரத்தில் வரும்போது ராஜேந்திரன் மகன் ராகுல்காந்தி, வடிவேல் மகன் பெரியசாமி, பூபதி மகன் புகழேந்தி, ராஜேந்திரன் மகன் கார்த்தி ஆகியோர்கள் பின் தொடர்ந்து சென்றனர் என்றும் எதிரி


RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:38:47 +0530

ராகுல்காந்தி வாதியின் மகளை முடியை பிடித்து இழுத்து துப்பட்டாவை பிடித்து இழுத்து வெடியை கொழுத்தி போட்ட போது, அதை கேட்ட காந்திமதியை இடுப்பில் கல்லை எடுத்து அடித்தும் பின்பு ராகுல்காந்தி, பெரியசாமி, புகழேந்தி, கார்த்தி, சேர்ந்து கொண்டு I LOVE YOU என்று சொல்லிக்கொண்டே பின் தொடர்ந்து வந்து அதை பார்த்த வாதியின் மகன் கண்ணன் சத்தம் போடவும் நாலு பேரும் ஓடி விட்டார்கள் என்றும் இதை வாதியின் மகன் எதிரி ராகுள் காந்தியிடம் கேட்டு ராகுல் காந்தி வாதியின் மகளை அசிங்கமாக திட்டியுள்ளார் என்றும் 04.11.2021 ம் தேதி மாலை சுமார் 07.00 மணியளவில் வாதி வீட்டில் இருக்கும் போது எங்கள் ஊர் காலனி தெருவைச் சேர்ந்த ராகுல் காந்திக்கு ஆதராவாக 1 முதல் 10 வரையான எதிரிகள் சேர்ந்து கொண்டு வாதியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து ஏய் தேவடியா மகளே, குச்சிகாரி மகனே உன் மகன் எங்கடா, அவன நாங்க அடிக்கனும் என்று திட்டிக்கொண்டே அவர்கள் அனைவரும் கையில் வைத்திருந்த கட்டையை எடுத்து சாமி படையலுக்கு வைத்திருந்த பொருள்கள் மற்றும் வீட்டின் ஓட்டை உடைத்தார்கள் என்றும் வாதி தப்பி வெளியில் வரும் போது என்னை மேற்படி நபர்கள் சேர்ந்துகொண்டு கையாலும், குச்சியாலும், வாதி தலை மற்றும் உடம்பில் அடித்து இழுத்து தள்ளினார்கள் என்றும் தடுக்க வந்த உறவினர் மகேஸ்வரியை ராகுல் காந்தி ஜாக்கெட்டை பிடித்து இழுத்து கீழே தள்ளினார் என்றும் அதை தடுக்க சென்ற வாதியையும் ராகுல் காந்தி கையில் வைத்திருந்த கத்தியால் இடது பக்கம் தலையில் கிழித்து உன் மகன் இப்ப இங்க வரவில்லை என்றால் உங்களை குடும்பத்தோடு கொலை செய்து விடுவோம் என அவைவரும் அவரவர் கையில் வைத்திருந்த கட்டை மற்றும் கத்தியை காட்டி மிரட்டியுள்ளார்கள் என்றும், எனவே எதிரிகளின் செய்கையானது இ.த.ச. 147, 148, 294(b) 323, 324, 427, 447, 506(2)IPC r/w. 4 of TNPHW Act –ஆகிய பிரிவுகளின் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக பாடாலூர் காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>குற்றவியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 207 இன் கீழ் நகல் வழங்குதல்</u>**

2. இந்நீதிமன்றத்தால் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு, இந்நீமன்றத்தில் முன்னிலையான 1 முதல் 10 வரையான எதிரிகளுக்கு கு.வி.மு.ச பிரிவு 207 இன்படி அரசுத் தரப்பில் வழக்கு ஆவணங்களின் நகல்களை இலவசமாக வழங்கப்பட்டது.

**<u>குற்றச்சாட்டுக்கள் வனைந்து குற்றம் பற்றி வினவுதல்</u>**

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:38:51 +0530

3) 1 முதல் 10 வரையான எதிரிகளுக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, 1, 2, 3, 4, 5, 6, 8, 9, 10 எதிரிகள் மீது இ.த.ச. 148, 294(b) 323, 324, 427, 447, 506(2) ஆகிய பிரிவுகளின் கீழும், 7 ஆம் எதிரி மீது இ.த.ச. 148, 294(b) 323, 324, 427, 447, 506(2) மற்றும் 4 of TNPHW Act ஆகிய பிரிவுகளின் கீழும் குற்றச்சாட்டுகள் வனைந்து குற்றங்கள் குறித்து, வினவியபோது 1 முதல் 10 வரையான எதிரிகள் குற்றத்தை மறுத்து குற்றவாளிகள் இல்லை எனவும் வழக்கு விசாரிக்கபட வேண்டும் என்று கோரியதால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

**<u>அரசுத் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் விவரம்</u>**

4. அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்களும் அ.சா.பொ.1, அ.சா.பொ.2 ஆகிய சான்று பொருட்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எதிரிகள் தரப்பில் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தப்படவில்லை.

**<u>அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் :-</u>**

5. இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 கருப்புசாமி தனது நீதிமன்ற சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியாது என்றும் ஆஜர் ஆகாத மற்ற எதிரிகளையும் தனக்கு தெரியாது என்றும் கடந்த 2021ம் வருடம் தீபாவளி அன்று ஆஞ்சனேயர் கோவிலுக்கு தனது மகள் மற்றும் மனைவி மற்றும் மகளின் தோழிகள் ஆகியோர்கள் சென்றுவிட்டு திரும்பும்போது, சிலர் அவர்களிடம் பிரச்சனை செய்ததாக இளையராஜா வந்து தன்னிடம் சொன்னார் என்றும் ராகுல்காந்தி மற்றும் சிலர் தனது மகனிடமும், மகளிடமும் பிரச்சனை செய்தார்கள் என்றும் அந்த பிரச்சனையில் யாரோ எறிந்த கட்டை ஒன்று பக்கத்து வீட்டு சுவரில் பட்டு தன் தலையில் விழுந்தது என்றும் பிறகு தான் மயக்கம் அடைந்துவிட்டேன் என்றும் பிறகு 108 ஆம்புலன்சில் சிகிச்சைக்காக அழைத்து சென்றார்கள் என்றும் பின்னர் இரவு 10.30 மணியளவில் நினைவு வந்தது என்றும் தன்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.ஆ.1 கைரேகை தன்னுடையதுதான் என்றும் புகார் வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் தனக்கு தெரியாது என்றும் போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் கூறி அரசுத்தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

6. சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 துரை தனது நீதிமன்ற சாட்சியத்தில் ஆஜர் எதிரிகளை தனக்கு தெரியாது என்றும் வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் தான் தூங்கி கொண்டு இருந்தேன் என்றும்

போலீசார் தன்னை இந்த வழக்கு விவரம் குறித்து விசாரித்தார்கள் என்றும் தான் எதுவும் தெரியாது என்று கூறிவிட்டேன் என்றும் கூறி அரசுத்தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

7. சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 மகேஷ்வரி தனது சாட்சியத்தில் வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் தான் அப்போது கேரளாவில் இருந்தேன் என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசுத்தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

8. பார்வைமகஜர் சாட்சியான அ.சா.4 செந்தில் தனது சாட்சியத்தில் வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் தான் அப்போது கர்நாடாவில் இருந்தேன் என்றும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும் தேதி, மாதம் ஞாபகம் இல்லை என்றும் கடந்த 4 வருடங்களுக்கு முன்பு போலீசார் தன்னை அழைத்து காவல் நிலையத்தில் எழுதாத வெள்ளை தாளில் தன்னிடம் அ.சா.ஆ.2 கையொப்பம் வாங்கினார்கள் என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் கூறி அரசுத்தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

9. பார்வைமகஜர் சாட்சியான அ.சா.5 பிச்சை தனது சாட்சியத்தில் தன்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.3 பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும் சுமார் 4 வருடங்களுக்கு முன்பு தான் கடைக்கு போவதற்காக கோவில் அருகே சென்ற போது போலிசார் படம் வரைந்து கொண்டிருந்தனர் என்றும் சம்பவயிடத்தின் அமைப்பை எழுதிக் கொண்டனர் என்றும் அவ்வாறு எழுதிய மகஜரில் தான் கையொப்பம் போட்டேன் என்றும் தன்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள அ.சா.ஆ.4 இரண்டாவது சாட்சி கையொப்பம் தன்னுடையது தான் என்றும் போலிசார் தன் முன்னிலையில் பொருட்கள் ஏதும் கைப்பற்றப்படவில்லை என்றும் போலிசார் தன்னை விசாரித்தனர் என்றும் கூறி அரசுத்தரப்பு வழக்கை ஆதரிக்காமல் பிறழ் சாட்சியாகிவிட்டார்.

10. சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.6 ஜெய்க்குமார் தனது சாட்சியத்தில் கடந்த 04.11.2021ம் தேதி அன்று பாடாலூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக சிக்கந்தர்பாஷா என்பவரும் காவல் ஆய்வாளராக ஜெயராமன் என்பவரும் பணியிலிருலுந்தார்கள் என்றும் தற்போது பணிமாறுதல் பெற்று வேறு மாவட்ட காவல்நிலையத்தில் பணி செய்து வருகிறார்கள் என்பதாலும் மேற்படி நபர்களை

அழைத்து விசாரணை செய்வதால் மேலும் காலதாமதம் ஏற்படும் என்பதாலும் வழக்கின் தன்மையை கருதி வழக்கை விரைந்து முடிக்க வேண்டி மேற்படி நபர்களுக்காக கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் தான் எதிரிகளுக்கெதிராக எந்த ஒரு புதிய சங்கதிகளையும் நீதிமன்றத்தில் பதிவு செய்யவில்லை என்றும் கடந்த 06.11.2021ம் தேதியன்று உதவி ஆய்வாளர் நிலைய பொறுப்பிலிருந்த போது பெரம்பலூர் அரசு மருத்துவமனையிலிருந்து வரப்பெற்ற தகவலைப் பெற்று அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த சாட்சி கருப்புசாமி என்பவரை விசாரித்து அ.சா.ஆ.5 புகார் வாக்குமூலம் பெற்று பின்னர் அதனை பரிசீலனை செய்து பாடாலூர் காவல் நிலைய குற்ற எண் 584/2021 பிரிவுகள் 147,148,294(b),427,447,506(2) r/w 4 of TNPHW Act ன் படி அ.சா.ஆ.6 முதல் தகவல் அறிக்கை செய்துள்ளார் என்றும் பின்னர் வழக்கு கோப்பினை பெற்ற காவல் ஆய்வாளர் சம்பவயிடம் சென்று சாட்சிகள் செந்தில், பிச்சை ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.7 பார்வை மகஜர், அ.சா.ஆ.8 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும் பின்னர் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் வழக்கு சம்பவத்தில் பயன்படுத்திய அ.சா.பொ.1 மூன்று கருவேல கட்டைகளையும், அ.சா.பொ.2 உடைந்த ஓட்டின் துண்டுகள் நான்கினையும் அ.சா.ஆ.9 கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார் என்றும் அது அ.சா.ஆ.10 படிவம் 91 மூலமாக (RP.No. 5/2022)ன் மூலமாக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் பின்னர் சாட்சிகள் கருப்புசாமி, துரை, மகேஷ்வரி, பிச்சை, செந்தில் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும் இவ்வழக்கின் எதிரிகள் 1 முதல் 6 வரையிலான நபர்களை கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டார்கள் என்றும் மற்ற எதிரிகள் பெரம்பலூர் மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுள்ளதால் அவர்களை கைது செய்யவில்லை என்றும் அ.சா.1க்கு மருத்துவமனையில் சிகிச்சையளித்த மருத்துவர் சவிதா என்பவரை விசாரணை செய்து அ.சா.ஆ.11 விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று ஒன்று பெறப்பட்டுள்ளது என்றும் சாட்சிகள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்த வகையில் அ.சா.ஆ.12 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் எதிரிகளின் செய்கையானது பிரிவுகள் 147, 148, 294(b), 323, 324, 427, 447, 506(2) r/w 4 of TNPHW Act ன் படி கடந்த 15.06.2022ம் தேதி அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:39:05 +0530

**குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 313 (1) (ஆ)இன் கீழ் வினவுதல்**

11. அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து 1 முதல் 10 வரையான எதிரிகளுக்கு பாதகமாக அமைந்துள்ள சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் கு.வி.மு.தொ. பிரிவு 313 (1) (ஆ)இன் கீழ் 1 முதல் 10 வரையான எதிரிகளிடம் விளக்கிக் கூறி வினவியபோது 1 முதல் 10 வரையான எதிரிகள் அவற்றை மறுத்துரைத்துள்ளனர். மேலும் எதிரிகள் தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்து எதிரிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**அரசுத் தரப்பு வாதம்**

12. அரசுத்தரப்பு வழக்கறிஞர் அவர்களால் அ.சா.1 முதல் அ.சா.6 வரையான சாட்சிகள் மூலமும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் 1 முதல் 10 வரையான எதிரிகள் மீதான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, சாட்சியங்களின் அடிப்படையில் 1 முதல் 10 வரையான எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

**எதிரிகள் தரப்பு வாதம்**

13. இதனை மறுத்து எதிரிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், 1 முதல் 10 வரையான எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், அரசு தரப்பில் முன்னிறுத்தப்பட்ட புகார்தாரர், கண்ணுற்ற சாட்சிகள் மற்றும் பார்வைமகஜர் சாட்சிகள் என அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் பிறழ் சாட்சிகள் ஆகிவிட்டார்கள் என்றும், 1 முதல் 10 வரையான எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் யாரும் அளிக்கவில்லை என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை 1 முதல் 10 வரையான எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்து உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார்.

14. இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் 1 முதல் 10 வரையான எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:39:10 +0530

**தீர்வு**

15. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் கவனமாகப் பரிசீலிக்கப்பட்டது. இவ்வழக்கின் வாதி கருப்புசாமி 04.11.2021 ஆம் தேதி தீபாவளி என்பதால் மாலை 05.00 மணிக்கு தனது வீட்டிலிருந்து மகள் ஜீவிதா, மனைவியின் தங்கை காந்திமதி, காயத்ரி, கௌதமி, ராஜசுதா, நந்தினி ஆகியோர்களுடன் தங்கள் ஊரில் உள்ள ஆஞ்சநேயர் மலைக்கு சென்று சாமி கும்பிட்டுவிட்டு மீண்டும் மாலை 06.15 மணிக்கு மலையிலிருந்து திரும்பி கீழே இறங்கி மலையடிவாரத்தில் வரும்போது ராஜேந்திரன் மகன் ராகுல்காந்தி, வடிவேல் மகன் பெரியசாமி, பூபதி மகன் புகழேந்தி, ராஜேந்திரன் மகன் கார்த்தி ஆகியோர்கள் பின் தொடர்ந்து சென்றனர் என்றும் எதிரி ராகுல்காந்தி வாதியின் மகளை முடியை பிடித்து இழுத்து துப்பட்டாவை பிடித்து இழுத்து வெடியை கொழுத்தி போட்ட போது, அதை கேட்ட காந்திமதியை இடுப்பில் கல்லை எடுத்து அடித்தும் பின்பு ராகுல்காந்தி, பெரியசாமி, புகழேந்தி, கார்த்தி, சேர்ந்து கொண்டு I LOVE YOU என்று சொல்லிக்கொண்டே பின் தொடர்ந்து வந்து அதை பார்த்த வாதியின் மகன் கண்ணன் சத்தம் போடவும் நாலு பேரும் ஓடி விட்டார்கள் என்றும் இதை வாதியின் மகன் எதிரி ராகுள் காந்தியிடம் கேட்டு ராகுல் காந்தி வாதியின் மகளை அசிங்கமாக திட்டியுள்ளார் என்றும் 04.11.2021 ம் தேதி மாலை சுமார் 07.00 மணியளவில் வாதி வீட்டில் இருக்கும் போது எங்கள் ஊர் காலனி தெருவைச் சேர்ந்த ராகுல் காந்திக்கு ஆதராவாக 1 முதல் 10 வரையான எதிரிகள் சேர்ந்து கொண்டு வாதியின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து ஏய் தேவடியா மகளே, குச்சிகாரி மகனே உன் மகன் எங்கடா, அவன நாங்க அடிக்கனும் என்று திட்டிக்கொண்டே அவர்கள் அனைவரும் கையில் வைத்திருந்த கட்டையை எடுத்து சாமி படையலுக்கு வைத்திருந்த பொருள்கள் மற்றும் வீட்டின் ஓட்டை உடைத்தார்கள் என்றும் வாதி தப்பி வெளியில் வரும் போது என்னை மேற்படி நபர்கள் சேர்ந்துகொண்டு கையாலும், குச்சியாலும், வாதி தலை மற்றும் உடம்பில் அடித்து இழுத்து தள்ளினார்கள் என்றும் தடுக்க வந்த உறவினர் மகேஸ்வரியை ராகுல் காந்தி ஜாக்கெட்டை பிடித்து இழுத்து கீழே தள்ளினார் என்றும் அதை தடுக்க சென்ற வாதியையும் ராகுல் காந்தி கையில் வைத்திருந்த கத்தியால் இடது பக்கம் தலையில் கிழித்து உன் மகன் இப்ப இங்க வரவில்லை என்றால் உங்களை குடும்பத்தோடு கொலை செய்து விடுவோம் என அவைவரும் அவரவர் கையில் வைத்திருந்த கட்டை மற்றும் கத்தியை காட்டி மிரட்டியுள்ளார்கள் என்றும் அரசுத் தரப்பு வழக்கு அமைந்துள்ளது. எதிரிகள் தரப்பில்

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:39:16 +0530

வழக்கில் சொல்லப்பட்டுள்ள குற்றங்கள் எதையும் 1 முதல் 10 வரையான எதிரிகள் செய்யவில்லை என்றும், அரசுத் தரப்பு வழக்கானது சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இருதரப்பு வாதங்களின் அடிப்படையில் பின்வருமாரு எதிரிகள் மீதான குற்றச்சாட்டுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு தீர்வு காணப்படுகிறது.

**<u>இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு 148-ன் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

16. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1 முதல் 10 வரையான எதிரிகள் தாக்கும் குற்றமுறு எண்ணத்துடன் ஆயுதங்களுடன் பொது இடத்தில் ஒன்று சேர்ந்துள்ளதாக 1 முதல் 10 வரையான எதிரிகளுக்கு எதிராக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 148-ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, முன்னிடப்பட்ட 1 முதல் 5 வரையிலான சாட்சிகள் யாரும் 1 முதல் 10 வரையான எதிரிகள் தாக்கும் எண்ணத்துடன் சம்பவ இடத்தில் கூடியதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே, 1 முதல் 10 வரையான எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 148-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இந்திய தண்டனைச் சட்டம் 427 பிரிவின் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

17. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1 முதல் 10 வரையான எதிரிகள், அ.சா.1 சாமி படையலுக்கு வைத்திருந்த பொருட்கள் மற்றும் வீட்டின் ஓட்டை உதைத்து சேதப்படுத்தியதாக 1 முதல் 10 வரையான எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 427-ன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 427-ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் 1 முதல் 10 வரையான எதிரிகள் அ.சா.1 சாமி படையலுக்கு வைத்திருந்த பொருட்கள் மற்றும் வீட்டின் ஓட்டை உதைத்து சேதப்படுத்தியதாக எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 1 முதல் 10 வரையான எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 427-ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:39:21 +0530

**<u>இந்திய தண்டணைச் சட்டம் 447 பிரிவின் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

18. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1 முதல் 10 வரையான எதிரிகள் புகார்தாரரின் வீட்டினுள் கட்டையுடன் அத்துமீறி நுழைந்ததாக 1 முதல் 10 வரையான எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 447–ன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 448–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் 1 முதல் 10 வரையான எதிரிகள் புகார்தாரரின் வீட்டினுள் கட்டையுடன் அத்துமீறி நுழைந்ததாக எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 1 முதல் 10 வரையான எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 447–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இந்திய தண்டணைச் சட்டப்பிரிவு 294(பி)–ன் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

19. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1 முதல் 10 வரையான எதிரிகள் மீது பொது இடத்தில் வைத்து புகார்தாரரான அ.சா.1 ஐ ஆபாசமாகத் திட்டியதாக குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 294(பி)–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் புகார்தாரரான அ.சா.1 ஐ 1 முதல் 10 வரையான எதிரிகள் பொது இடத்தில் மற்றவர்களுக்கு தொந்தரவு தரும் வகையில் அருவருக்கத்தக்க வார்த்தைகளால் திட்டியதாக எதுவும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 1 முதல் 10 வரையான எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 294(பி)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இந்திய தண்டணைச் சட்டம் 323 பிரிவின் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

20. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1 முதல் 10 வரையான எதிரிகள் அ.சா.1 ஐ கையால் அடித்து உதைத்து சொற்பக்காயத்தை ஏற்படுத்தியுள்ளதாக 1 முதல் 10 வரையான எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 323–ன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 323–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட


RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:39:26 +0530

சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் அ.சா.1 ஐ 1 முதல் 10 வரையான எதிரிகள் தாக்கி சொற்பக்காயம் ஏற்படுத்தியதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே, 1 முதல் 10 வரையான எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 323–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இந்திய தண்டணைச் சட்டம் 324 பிரிவின் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

21. இந்த வழக்கில் அரசு தரப்பில் 1 முதல் 10 வரையான எதிரிகள் அ.சா.1 ஐ குச்சியால் தலை மற்றும் உடம்பில் தாக்கி சொற்பக்காயத்தை ஏற்படுத்தியுள்ளதாக 1 முதல் 10 வரையான எதிரிகள் மீது இ.த.ச.பிரிவு 324–ன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இ.த.ச.பிரிவு 324–ன் கீழ் மேற்படி குற்றச்சாட்டு குறித்து வழக்கில் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, இந்த வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் அ.சா.1 ஐ 1 முதல் 10 வரையான எதிரிகள் குச்சியால் தாக்கி சொற்பக்காயம் ஏற்படுத்தியதாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. எனவே, 1 முதல் 10 வரையான எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 324–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**<u>இந்திய தண்டணைச் சட்டம் 506(2) பிரிவின் கீழான குற்றச்சாட்டுகள் குறித்த பரிசீலனையும் தீர்வும் :</u>**

22. இந்த வழக்கில் அரசுத் தரப்பில் 1 முதல் 10 வரையான எதிரிகள் புகார்தாரரை கட்டை மற்றும் கத்தியை காட்டி இப்ப இங்க வரவில்லை என்றால் உங்களை குடும்பத்தோடு கொலை செய்துவிடுவோம் என்று குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்துள்ளதாக 1 முதல் 10 வரையான எதிரிகள் மீது இ.த.ச.506(2) பிரிவின் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டு குறித்து பரிசீலித்து பார்க்கையில், அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் எதிரிகள் புகார்தாரரை குற்றமுறு கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 1 முதல் 10 வரையான எதிரிகள் மீதான இ.த.ச பிரிவு 506(2)–ன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court Digitally signed by RESHMA Location: Perambalur Date: 2026.03.05 17:39:31 +0530

**<u>இந்திய தண்டனைச் சட்டப்பிரிவு தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 –ன் கீழான குற்றச்சாட்டு குறித்த பரிசீலனையும் தீர்வும்:</u>**

23. 7 ஆம் எதிரி அ.சா.3 மகேஷ்வரியை முடியை பிடித்து இழுத்தும் ஜாக்கெட்டை பிடித்து இழுத்தும் கீழே தள்ளி பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் அவருக்கெதிராக குற்றவியல் பலத்தை பயன்படுத்தியதாக தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 இன் கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. மேற்படி குற்றச்சாட்டு குறித்து பரிசீலித்து பார்க்கையில், அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சிகள் தங்களது சாட்சியத்தில் 7 ஆம் எதிரி அ.சா.3–க்கு எதிராக பெண் என்றும் பாராமல் பொது இடத்தில் குற்றவியல் பலத்தை பயன்படுத்தியதாக எதுவும் குறிப்பிட்டு சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 7 ஆம் எதிரி மீதான தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 4 – இன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

24. மேற்கண்ட விரிவான பரிசீலனையின் அடிப்படையில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கபடவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. அதனடிப்படையில் 1 முதல் 10 வரையான எதிரிகள் மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

25. முடிவில், 1, 2, 3, 4, 5, 6, 8, 9, 10 எதிரிகள் மீதான இ.த.ச. 148, 294(b) 323, 324, 427, 447, 506(2) ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளையும், 7 ஆம் எதிரி மீதான இ.த.ச. 148, 294(b) 323, 324, 427, 447, 506(2) மற்றும் 4 of TNPHW Act ஆகிய பிரிவுகளின் கீழான குற்றச்சாட்டுகளையும் அரசுத் தரப்பில் தகுதிநிலை ஐய்யப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1) இன் கீழ் 1 முதல் 10 வரையான எதிரிகளை மேற்கண்ட குற்றச்சாட்டுகளிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. மேலும், 1 முதல் 10 வரையான எதிரிகள் எழுதிக் கொடுத்துள்ள பிணையப் பத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

26. ஆர்.பி.எண். 05/2022 ல் உள்ள வழக்கு சொத்தான அ.சா.பொ. 1 மூன்று அடி நீளமுள்ள கருவேள கட்டைகள், அ.சா.பொ.2 உடைந்த ஓட்டின் துண்டுகள் நான்கு ஆகியவற்றை மேல்முறையீடு காலத்திற்கு பிறகு அழித்துவிட உத்தரவிடப்படுகிறது.

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:39:36 +0530

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப்பார்த்து, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, இன்று 05.03.2026 ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

RESHMA Judicial Magistrate, Additional Mahila Court Digitally signed by RESHMA Location: Perambalur Date: 2026.03.05 17:39:40 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

**I. அரசுத் தரப்பு சாட்சிகள் :–**

1. அ.சா.1 – கருப்புசாமி
2. அ.சா.2 – துரை
3. அ.சா.3 – மகேஷ்வரி
4. அ.சா.4 – செந்தில்
5. அ.சா.5 – பிச்சை
6. அ.சா.6 – ஜெய்க்குமார்(சிறப்பு உதவி ஆய்வாளர்)

**II. அரசுத் தரப்பு சான்றாவணங்கள் :–**

1. அ.சா.ஆ.1 – புகாரில் உள்ள கைரேகை
2. அ.சா.ஆ.2 – பார்வைமகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து
3. அ.சா.ஆ.3 – பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து
4. அ.சா.ஆ.4 – கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து
5. அ.சா.ஆ.5 – புகார் வாக்குமூலம்
6. அ.சா.ஆ.6 – முதல் தகவல் அறிக்கை
7. அ.சா.ஆ.7 – பார்வைமகஜர்
8. அ.சா.ஆ.8 – மாதிரிவரைபடம்
9. அ.சா.ஆ.9 – கைப்பற்றுதல் மகஜர்
10. அ.சா.ஆ.10 – படிவம் 91
11. அ.சா.ஆ.11 – விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று
12. அ.சா.ஆ.12 – சட்டப்பிரிவு மாறுதலறிக்கை

**III. அரசுத் தரப்பு சான்று பொருள் :–**

அ.சா.பொ.1 மூன்று அடி நீளமுள்ள கருவேள கட்டைகள்

அ.சா.பொ.2 உடைந்த ஓட்டின் துண்டுகள் நான்கு

**<u>IV.எதிரிகள் தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்று பொருள் :–</u>** இல்லை

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:39:45 +0530

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
பெரம்பலூர்.

<u>குறிப்பு</u>

1. வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
2. எந்த சாட்சியும் 3 வாய்தாவுக்கு மேல் விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

As per Rule 106 of Criminal Rules of Practice

| S. No. | Name of the Police station | Description of the accused | | Date of | | Explanation of Delay |
|---|---|---|---|---|---|---|
| 1. | Padalur PS, Cr.No.584/2021 U/S.148, 294(b) 323, 324, 427, 447, 506(2) and 4 of TNPHW Act | Name | A1 - Marukandan | Occurrence | 04.11.2021 | - |
| | | Father's Name | Selvaraj | Complaint | 04.11.2021 | |
| | | Occupation | Labourar | Apprehension | 05.11.2021 | |
| | | Residence | Therani, Alathur Taluk, Perambalur (DT) | Release on bail | 10.11.2021 | |
| | | Age | 20/2021 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 17.06.2025 | |
| | | | | Closure of Trial | 25.02.2026 | |
| | | | | Sentence or Order | 02.01.2026 | |
| 2. | Padalur PS, Cr.No.584/2021 U/S.148, 294(b) 323, 324, 427, 447, 506(2) and 4 of TNPHW Act | Name | A2 - Periyasamy | Occurrence | 04.11.2021 | |
| | | Father's Name | Vadivel | Complaint | 04.11.2021 | |
| | | Occupation | Labourar | Apprehension | -- | |
| | | Residence | Therani, Alathur Taluk, Perambalur (DT) | Release on bail | 14.12.2021 (AB) | |
| | | Age | 20/2021 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 17.06.2025 | |
| | | | | Closure of Trial | 25.02.2026 | |
| | | | | Sentence or Order | 02.01.2026 | |
| 3. | Padalur PS, Cr.No.584/2021 U/S.148, 294(b) 323, 324, 427, 447, 506(2) and 4 of TNPHW Act | Name | A3 - Pugazhendhi | Occurrence | 04.11.2021 | |
| | | Father's Name | Poobathi | Complaint | 04.11.2021 | |
| | | Occupation | Labourar | Apprehension | -- | |
| | | Residence | Therani, Alathur Taluk, Perambalur (DT) | Release on bail | 14.12.2021 (AB) | |
| | | Age | 22/2021 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 17.06.2025 | |
| | | | | Closure of Trial | 25.02.2026 | |
| | | | | Sentence or Order | 02.01.2026 | |
| 4. | Padalur PS, Cr.No.584/2021 U/S.148, 294(b) 323, 324, 427, 447, 506(2) and 4 of TNPHW Act | Name | A4 - Sithu | Occurrence | 04.11.2021 | |
| | | Father's Name | Kandhasamy | Complaint | 04.11.2021 | |
| | | Occupation | Labourar | Apprehension | 05.11.2021 | |

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:39:51 +0530

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | Residence | Therani, Alathur Taluk, Perambalur (DT) | Release on bail | 10.11.2021 | |
| | | Age | 24/2021 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 17.06.2025 | |
| | | | | Closure of Trial | 25.02.2026 | |
| | | | | Sentence or Order | 02.01.2026 | |
| 5. | Padalur PS, Cr.No.584/2021 U/S.148, 294(b) 323, 324, 427, 447, 506(2) and 4 of TNPHW Act | Name | A5 - Chandrasekar | Occurrence | 04.11.2021 | |
| | | Father's Name | Periyasamy | Complaint | 04.11.2021 | |
| | | Occupation | Labourar | Apprehension | 05.11.2021 | |
| | | Residence | Therani, Alathur Taluk, Perambalur (DT) | Release on bail | 10.11.2021 | |
| | | Age | 23/2021 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 17.06.2025 | |
| | | | | Closure of Trial | 25.02.2026 | |
| | | | | Sentence or Order | 02.01.2026 | |
| 6. | Padalur PS, Cr.No.584/2021 U/S.148, 294(b) 323, 324, 427, 447, 506(2) and 4 of TNPHW Act | Name | A6 - Karthik | Occurrence | 04.11.2021 | |
| | | Father's Name | Suresh | Complaint | 04.11.2021 | |
| | | Occupation | Labourar | Apprehension | 05.11.2021 | |
| | | Residence | Therani, Alathur Taluk, Perambalur (DT) | Release on bail | 10.11.2021 | |
| | | Age | 20/2021 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 17.06.2025 | |
| | | | | Closure of Trial | 25.02.2026 | |
| | | | | Sentence or Order | 02.01.2026 | |
| 7. | Padalur PS, Cr.No.584/2021 U/S.148, 294(b) 323, 324, 427, 447, 506(2) and 4 of TNPHW Act | Name | A7 - Ragulgandhi | Occurrence | 04.11.2021 | |
| | | Father's Name | Rajendran | Complaint | 04.11.2021 | |
| | | Occupation | Labourar | Apprehension | -- | |
| | | Residence | Therani, Alathur Taluk, Perambalur (DT) | Release on bail | 14.12.2021 (AB) | |
| | | Age | 27/2023 | Commitment | --- | |
| | | | | Commencement of Trial | 17.06.2025 | |
| | | | | Closure of Trial | 25.02.2026 | |
| | | | | Sentence or Order | 02.01.2026 | |
| 8. | Padalur PS, Cr.No.584/2021 U/S.148, 294(b) 323, 324, 427, 447, 506(2) and 4 of TNPHW Act | Name | A8 - Sudhakar | Occurrence | 04.11.2021 | |
| | | Father's | Jothivel | Complaint | 04.11.2021 | |



RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:39:56 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | Name | | | |
| | | Occupation | Labourar | Apprehension | 05.11.2021 |
| | | Residence | Therani, Alathur Taluk, Perambalur (DT) | Release on bail | 10.11.2021 |
| | | Age | 24/2021 | Commitment | --- |
| | | | | Commencement of Trial | 17.06.2025 |
| | | | | Closure of Trial | 25.02.2026 |
| | | | | Sentence or Order | 02.01.2026 |
| 9. | Padalur PS, Cr.No.584/2021 U/S.148, 294(b) 323, 324, 427, 447, 506(2) and 4 of TNPHW Act | Name | A9 - Poovarasan | Occurrence | 04.11.2021 |
| | | Father's Name | Periyasamy | Complaint | 04.11.2021 |
| | | Occupation | Labourar | Apprehension | 05.11.2021 |
| | | Residence | Therani, Alathur Taluk, Perambalur (DT) | Release on bail | 10.11.2021 |
| | | Age | 26/2021 | Commitment | --- |
| | | | | Commencement of Trial | 17.06.2025 |
| | | | | Closure of Trial | 25.02.2026 |
| | | | | Sentence or Order | 02.01.2026 |
| 10. | Padalur PS, Cr.No.584/2021 U/S.148, 294(b) 323, 324, 427, 447, 506(2) and 4 of TNPHW Act | Name | A10 - Karthik | Occurrence | 04.11.2021 |
| | | Father's Name | Rajendran | Complaint | 04.11.2021 |
| | | Occupation | Labourar | Apprehension | -- |
| | | Residence | Therani, Alathur Taluk, Perambalur (DT) | Release on bail | 15.12.2021 (AB) |
| | | Age | 21/2023 | Commitment | --- |
| | | | | Commencement of Trial | 17.06.2025 |
| | | | | Closure of Trial | 25.02.2026 |
| | | | | Sentence or Order | 02.01.2026 |

RESHMA

Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:40:01 +0530

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.

Judicial Form No.61 (See Rule 106)
IN THE COURT OF THE ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

JUDGMENT IN CALENDAR CASE NO. 221 OF 2022

ON THE FILE OF THE ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.

| | |
|---|---|
| Complainant | Karuppusamy |
| Accused | A1.Marukandan S/o.Selvaraj<br>A2.Periyasamy S/o.Vadivel<br>A3.Pugazhendhi S/o.Poobathi<br>A4.Sithu S/o.Kandhasamy<br>A5.Chandrasekar S/o.Periyasamy<br>A6.Karthik S/o.Suresh<br>A7.Ragulgandhi S/o.Rajendran<br>A8.Sudhakar S/o.Jothivel<br>A9.Poovarasan S/o.Periyasamy<br>A10.Karthik S/o.Rajendran |
| Offence | U/S.148, 294(b) 323, 324, 427, 447, 506(2) and 4 of TNPHW Act |
| Findings | Acquitted |
| Sentence | -- |

| **Serial Number** | **Description of the Accused** | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | **Name** | **Father's/ Husband's Name** | **Caste or race** | **Occupation** | **Residence** | **Age** |
| 1. | Marukandan | Selvaraj | Male | Labourar | Therani | 20/2021 |
| 2. | Periyasamy | Vadivel | Male | Labourar | Therani | 20/2021 |
| 3. | Pugazhendhi | Poopathy | Male | Labourar | Therani | 22/2021 |
| 4. | Sithu | Kandhasamy | Male | Labourar | Therani | 24/2021 |
| 5. | Chandrasekar | Periyasamy | Male | Labourar | Therani | 23/2021 |
| 6. | Karthik | Suresh | Male | Labourar | Therani | 20/2021 |
| 7. | Ragulgandhi | Rajendran | Male | Labourar | Therani | 27/2023 |
| 8. | Sudhakar | Jothivel | Male | Labourar | Therani | 24/2021 |
| 9. | Poovarasan | Periyasamy | Male | Labourar | Therani | 26/2021 |
| 10. | Karthik | Rajendran | Male | Labourar | Therani | 21/2023 |

| Date of | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **Occurance** | **Complaint** | **Apprehension or Appearance** | **Release on bail** | **Commencement of trail** | **Closure of trial** | **Sentence or Order** | **Explanation of Delay** |
| 04.11.2021 | 04.11.2021 | 05.11.2021 | 10.11.2021 | 17.06.2025 | 25.02.2026 | 05.03.2026 | - |
| 04.11.2021 | 04.11.2021 | 14.12.2021 | 14.12.2021(AB) | 17.06.2025 | 25.02.2026 | 05.03.2026 | - |
| 04.11.2021 | 04.11.2021 | 14.12.2021 | 14.12.2021(AB) | 17.06.2025 | 25.02.2026 | 05.03.2026 | - |
| 04.11.2021 | 04.11.2021 | 05.11.2021 | 10.11.2021 | 17.06.2025 | 25.02.2026 | 05.03.2026 | - |
| 04.11.2021 | 04.11.2021 | 05.11.2021 | 10.11.2021 | 17.06.2025 | 25.02.2026 | 05.03.2026 | - |
| 04.11.2021 | 04.11.2021 | 05.11.2021 | 10.11.2021 | 17.06.2025 | 25.02.2026 | 05.03.2026 | - |

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:40:10 +0530

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 04.11.2021 | 04.11.2021 | 14.12.2021 | 14.12.2021(AB) | 17.06.2025 | 25.02.2026 | 05.03.2026 | - |
| 04.11.2021 | 04.11.2021 | 05.11.2021 | 10.11.2021 | 17.06.2025 | 25.02.2026 | 05.03.2026 | - |
| 04.11.2021 | 04.11.2021 | 05.11.2021 | 10.11.2021 | 17.06.2025 | 25.02.2026 | 05.03.2026 | - |
| 04.11.2021 | 04.11.2021 | 15.12.2021 | 15.12.2021(AB) | 17.06.2025 | 25.02.2026 | 05.03.2026 | - |

RESHMA
Judicial Magistrate, Additional Mahila Court
Digitally signed by RESHMA
Location: Perambalur
Date: 2026.03.05 17:40:07 +0530

Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.